SJK (T) TASEK PERMAI
14120 SIMPANG AMPAT
COMMITTED TOWARDS SUCCESS

**கட்டளை 1 : பொருத்தமான இணையுடன் இணைக்கவும். ( *திறன் : 4.7.5* )**

| | |
|---|---|
| ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால். | நாம் ஈடுபடும் செயலின் பின்விளைவுகளை நன்கு ஆராய்ந்த பிறகே அச்செயலில் ஈடுபட வேண்டும். |
| ஆழம் அறியாமல் காலை விடாதே. | ஒரே சமயத்தில் இரு வெவ்வேறு செயல்களில் ஈடுபட்டால் எக்காரியத்தையும் செவ்வனே செய்து முடிக்க முடியாது. |
| வெள்ளம் வருமுன் அணைபோடு. | வாழ்க்கையில் எச்சரிக்கையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டால் எதிர்வரும் துன்பங்களையோ இடர்களையோ தவிர்க்கலாம். |

**கட்டளை 2 : சூழலுக்கு ஏற்ற பழமொழியை தேர்ந்தெடுக.**

மதி : என்னப்பா இது? நீங்கள் இருவரும் குமரனுக்காகக் காத்திருக்கலாம் என்று உட்கார்ந்து விட்டீர்கள். மற்ற நண்பர்கள் புறப்பட்டு நிற்கிறார்கள். இப்படி ____________________________ என்று இருக்கிறீர்களே!

ரவி : என்ன செய்வது? குமரன் வந்தால் சண்டை போடுவான். பிரச்சனையைத் தவிர்க்க ____________________________ என்று சொல்வதைப் போல எச்சரிக்கையுடன் செயல்படுகிறோம்.

அழகன் : இதோ பார் விமலன், குமரன் இல்லாமல் நாம் வெற்றி வாகை சூட முடியும் என்பதை அவனுக்குக் காட்ட வேண்டும்.

விமலன் : இங்கே பார் அழகன், நாம் போவது புதிய இடம். அங்குள்ள நிலவரம் குறித்து நமக்குத் தெரியாது. ____________________________ என்பார்கள். குமரன் உடனிருந்தால் நன்றாக இருக்கும்



- வெள்ளம் வருமுன் அணைபோடு.
- ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால்.
- ஆழம் அறியாமல் காலை விடாதே.

ஆக்கம் : ஷாமினி சந்திரன்

LIVEWORKSHEETS